[திரு. எம். அண்ணாமலை] [1979 மார்ச் 6

பேசினார்கள். அந்த ஆசிரியர்களுடைய பிற கோரிக்கைககள் சம்பந்தமாக என்ன பரிசீலனை செய்யப்பட்டது என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு கல்வி நிறுவனத்தை அரசு ஏற்றுக்கொள்வது என்பது பல்வேறு விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டது. இப்பொழுது நம் முன்னால் உள்ள பிரச்னை ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு, இருக்கிற அதிகார வரம்பிற்குள் இந்த அரசு ஏதேனும் செய்கிறதா என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிய விரும்புகிறார்கள் என்று கருதுகிறேன் அந்த அடிப்படையில் இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் பாதிக்கப்படாத வகையில் எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்திருக்கிறது.

(6) அரசினர் தீர்மானம்.

விதி 41(3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41 (3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(5) கவன ஈர்ப்புகள்— தொடர்ச்சி.

(இ) உதகமண்டலம் மேட்டுப்பாளையம் பாதையில் நடைபெறும் நிவாரணப் பணிகள் குறித்து.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி எண். 41 ன் கீழ் கீழ்க்கண்டபொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.